# மகிழ்ச்சி

MAGIZHCHI
MAGAZINE

APRIL
2024

## உயிர்த்தெழுந்த
## கிறிஸ்துவின்மீது நம்பிக்கை




C.S.I. TAMIL CHURCH SHARJAH
The United Arab Emirates,
Mob : 0507032150 / website : www.csitamilsharjah.com


For Private Circulation Only

# இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆயர் மடல் | 3 |
| செயலர் மடல் | 5 |
| திருமறை தியானம் | 7 |
| பெண்கள் பகுதி | 10 |
| அறிந்து கொள்வோம் | 12 |
| இனிய இல்லறம் | 13 |
| Church History | 16 |
| திருமறையை தெரிந்துகொள்வோம் | 20 |
| Kids Corner | 21 |
| Birthday & Wedding Anniversary Celebrants | 23 |
| Daily Bible Reading | 25 |
| ஆராதனை தியானப் பொருள் | 26 |



# From the Presbyter's Desk

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

உயிர்த்தொழுதலும் வாழ்வுமாய் இருக்கின்ற ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரிலே அன்பின் வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்கிறேன்.

கடந்த மாதம் முழுவதும் நம்மை பாதுகாத்து பராமரித்து வழி நடத்தி வந்த கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். கடந்த மாத ஊழியங்கள் அனைத்திலும் உற்சாகமாய் பங்கு பெற்ற உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

புனித வார கன்வென்ஷன் கூட்டங்கள் நம்முடைய திருச்சபையில் வைத்து 25ம் தேதி முதல் 27ம் தேதி வரை நடைபெற்றது Rev.Dr.John Samuel (Gurukal Lutheran Theological College,) அவர்கள் ஆண்டவருடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டார்கள், அநேகர் உற்சாகமாய் கலந்து கொண்டீர்கள் உங்களை திருச்சபையின் சார்பாக நான் வாழ்த்துகிறேன், இந்த லெந்துகால சிறப்பு கூடுகைகள் உங்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமாய் இருந்திருக்கும் என்பதை கர்த்தருக்குள் நான் நம்புகிறேன். புனித வியாழன் ஆராதனையிலே பங்குகொண்ட உங்கள் அனைவருக்கும் கூட கிறிஸ்துவின்

நாமத்திலே நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன், கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் அது புதிய அனுபவமாய் இருந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை,புனித வெள்ளி ஆராதனையில் சிலுவை மொழிகளை பகிர்ந்து கொண்ட Rev Dr.John Samuel, Rev.Stephen Marian (C.N.I), Rev.Giftson(Umm al quwain), Rev.Nathaniel (Fujairah) அவர்களுக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

வருகின்ற ஏப்ரல் 1-ம் தேதி முதல் ஏப்ரல் 5ம் தேதி வரை நம்முடைய திருச்சபையில் விடுமுறை வேதாகம பள்ளி நடைபெற இருக்கிறது, உங்கள் குழந்தைகளை உற்சாகமாக அனுப்பி கொடுக்கும்படியாக உங்களை கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து V.B.S. ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளும் படியாகவும், பிள்ளைகளுடைய பாதுகாப்பு,பயணங்கள், இருதி நாள் நகழ்வுகளுக்காகவும் அனைந்து காரியங்களையும் கடவுள் நன்மையினால் நிரப்பிட உங்களுடைய குடும்ப ஜெபங்களிலே நினைவு கூறும்படியாக உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நமது குழந்தைகள் புதிய கல்வி ஆண்டுக்குள்ளாக பிரவேசிக்க இருக்கிறார்கள் அவர்களை வாழ்த்துகிறேன். கர்த்தர் நம் பிள்ளைகளை ஞானத்திலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும், அதிகமதிகமாய் வளர அருள் புரிவாராக.

இறை ஆசி உங்கள் அனைவரோடும் தங்கி இருப்பதாக.

இறைபணியில்
அருள்திரு. J.ஜான் ஜெபலின் ஜோஸ்
☎ +971 50 703 2150
e-mail : tamilchurchcsisharjah@gmail.com



# செயலர் மடல்

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே, திருச்சபையின் அங்கங்களாகிய உங்களனைவருக்கும் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த மாதம் முழுவதும் நம்மை வழுவாது காத்த தேவனுக்கு நன்றிகளை ஏறெடுப்போம்.

இந்த வருட லெந்து கால சிறப்பு திருவிருந்து ஆராதனை, வெள்ளிக் கிழமைகள் தோறும் மாலை 8.00 மணி முதல் 9.00 மணிவரை St. Luke's Hall ல் வைத்து நடைபெற்றது, திருச்சபையார் அநேகர் இந்த ஆராதனைகளில் பங்குபெற்றனர். இப்புதிய முயற்சியை அறிமுகப்படுத்திய ஆயர் அவர்களுக்கு வாழ்த்துதல்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த வருட லெந்து கால கன்வென்ஷன் கூட்டங்கள் மார்ச் 25-ம் தேதி முதல் 27-ம் தேதி வரை நடைபெற்றது. அதைத் தொடர்ந்து பெரிய வியாழன், பெரிய வெள்ளி மற்றும் உயிர்த்தெழுந்த திருநாள் ஆராதனைகளிலும் கர்த்தருடைய வார்த்தையை சிறப்பாக பகிர்ந்து கொண்ட Rev.Dr.David John Samuel அவர்களுக்கு, நிர்வாக குழுவின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது திருச்சபையில் நீண்ட நாட்கள் பாடகர் குழுவிலும், பின்னர் 4 ஆண்டுகள் பாடகர் குழு தலைவராகவும் தன்னை ஈடுபடுத்தி சிறப்பான பங்களிப்பை வழங்கி மீண்டும் தாயகம் திரும்பும் அன்பு சகோதர் ஜெயராஜ் இஸ்ரவேல் அவர்களுக்குத் திருச்சபையின் சார்பிலும், நிர்வாக் குழுவின் சார்பிலும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேவன் தாமே தொடர்ந்து அவர்களது எதிர்காலத் திட்டங்களில் உடனிருந்து ஆசீர்வதிக்கும்படியாக திருச்சபையார் ஜெபிக்கும்படியாக வேண்டிக்கொள்கிறோம்.

இந்த மாதம் 1 முதல் 6-ம் தேதி வரை நடைபெறவிருக்கும் விடுமுறை வேதாகமப் பள்ளி அதற்கான பணிகள், தேவைகள், பங்கேற்கும் குழந்தைகள் அதனை பொறுப்பேற்று நடத்தும் Directors, VBS Co Ordinator, CSS Team, Teachers, and Volunteers, அனைவருக்காகவும் திருச்சபையார் ஜெபிக்கும்படி வேண்டிக்கொள்கிறோம்.

தேவன் தாமே நம்மனைவரையும் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.

ஆமென்.



# உயிர்த்தெழுந்த
## கிறிஸ்துவின்மீது நம்பிக்கை

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

உங்கள் அனைவருக்கும் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரிலே அன்பின் வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்கிறேன்.

“இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்”. (யோவான் 11:25)

“விசுவாசம்” என்பது கிறிஸ்தவ வாழ்வின் மையமாகக் காட்டப்படுகிறது. ஆபிரகாமை விசுவாசத்தின் தகப்பனாக திருமறை காட்டுகிறது. குறிப்பாக விசுவாசத்தின் ஆழத்தை எபிரேய நூலின் ஆக்கியோன் மிகத்தெளிவாக விளக்குகிறார்(எபி:11) “விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது” (எபி:11:1) என்று விசுவாசத்தை வரையறை செய்கிறார்.

விசுவாசத்தைக் குறித்து பவுல் அப்போஸ்தலன் தன்னுடைய நிருபங்களில் மிகவும் அழுத்தம் கொடுத்து எழுதுகிறார். விசுவாசமே ஆசீர்வாதம் என்பதோடு, விசுவாசத்தில் நிலைத்திருங்கள் என்று திருச்சபைக்கும், இறைமக்களுக்கும் அழைப்பு விடுகிறார். குறிப்பாக அப்.26:12-23 பவுலின் விசுவாசம் வார்த்தையில் வெளிப்படுவதை காண முடிகிறது. இப்பகுதியின்

பின்னணியத்தை பார்க்கும் போது விசாரணைக்குட்படுத்தப்பட்டவராக அகரிப்பா அரசரின் முன்பு பவுல் நிற்கிறார். யூதர்கள் பவுல் மீது இரண்டு குற்றச்சாட்டுகளை வைத்தனர்.

1. யூதர்களிடையே குழப்பமூட்டுகிறார் (அப்.24:5)

2. திருக்கோவிலை தீட்டுப்படுத்தினார் (அப்.24:7)

இந்நிலையில் பலர் விசாரித்த பின்பு, அகரிப்பாவும் பவுலின் தரப்பு வாதங்களை கேட்பதாக இப்பகுதி விளக்கப்படுகின்றது. பவுலின் மறுமொழி விசுவாசத்தில் வலுவாக இங்கு வெளிப்பட்டுள்ளது. தன்னுடைய வார்த்தை ஒவ்வொன்றிலும் விசுவாசத்தில் நிலைப் பெற்றவராய் வெளிப்படுவதை காண முடிகிறது. கிறிஸ்து தன்னை அழைத்த விதத்தை இரண்டாவது முறையாக வெளிப்படுத்துகிறார். (26:14), (22:4-16). அந்த அன்பு வார்த்தையில் நிலைத்தவராய், அகரிப்பா அரசரை தன்னுடைய வார்த்தையின் வழியாக, கிறிஸ்துவின் மீதுள்ள அன்பு கடந்த நம்பிக்கையால் மனம் திரும்புதலுக்கு நேராக வழி நடத்துகிறார்.

நம்முடைய அன்றாட வாழ்வில் நாம் கிறிஸ்துவின் மீது கொண்டுள்ள நம்பிக்கையில் உறுதிபடுகின்ற அதே வேளையில், நம்முடைய வாயின் வார்த்தைகளும் விசுவாச நிறைந்ததாகவும், கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் நிலையில் காணப்பட வேண்டியது அவசியம். மேலும் நாம் பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தையின் வல்லமையை இயேசு கிறிஸ்து தம்முடைய சீடர்களுக்கு போதிக்கும் போது “தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசத்தியால் சொன்னபடியே நடக்கும்” (மாற்கு 11:23) என்று திட்டவட்டமாக கூறுகிறார். நம்முடைய ஒவ்வொரு வார்த்தையும் விசுவாசம் நிறைந்ததாக காணப்படுகின்ற போது அது நமக்கு ஜீவனையே அளிக்கும்.

யோவான் 11:17-28 இங்கு லாசர் உயிருடன் எழுப்பப்படுவதற்கு முன்பு இயேசு கிறிஸ்துவுடன் மார்த்தாள் உரையாடும் பகுதி கொடுக்கப்பட்டுள்ளது. யோவான் 11:23-ல் இயேசு, லாசரு உயிர்த்தெழுந்திருப்பான் எனக் கூறுவதற்கு மறுமொழியாக மார்த்தாள், இறுதி காலத்தில் நடக்கப் போவதை இயேசு கூறுவதாக எண்ணி பதில் தருகிறார் (11:24). ஏனெனில் இது பரிசேயரின் நம்பிக்கை (அப்.23:8). இயேசு கிறிஸ்து தான் கூறியவற்றின் ஆழப்பொருளை 25, 26-ம் வசனங்களில் மிகத் தெளிவாக விளக்குகிறார். அதாவது மார்த்தாள் கூறுகிற இறுதி நாளானது, தன்னிலே தொடங்கி விட்டதாக கூறுகிறார், நானே உயிர்த்தெழுதலும் வாழ்வும் என திட்டமாகக் கூறுகின்றார்.

இதுவே இப்பகுதியில் முக்கிய அழுத்தம் பெறுகிறது. உயிர்த்தெழுதலும், வாழ்வும் இயேசு கிறிஸ்துவுக்குள்ளேயே இருக்கிறது. அது நிகழ்காலத்துக்கும், வருங்காலத்திற்குரியது என தெளிவுபடுத்துகிறார் (யோ 5:25). இதன் ஆழப்பொருள் அவர் இன்றி வாழ்வும் இல்லை, உயிர்த்தெழுதலும் இல்லை. இவ்வுயிர்த்தெழுதல் இயேசு கிறிஸ்துவிலேயே தொடங்கி விட்டது. இதையே "நிறைவேறியே இறுதியியல்" (Realized eschatology) என்று இறையியலாளர்கள் கூறுகின்றனர். இதன்படி, இம்மையிலும் மறுமையிலும் விசுவாச மார்க்கத்தார் மரித்தாலும் பிழைப்பார் என்று திட்டவட்டமாக செய்தியை மார்த்தாளின் வழியாக ஆண்டவர் மீண்டும் நினைப்பூட்டுகிறார்.

மேலும் நாம் வாழுகின்ற இவ்வுலக வாழ்வோடு நம்முடைய வாழ்வு முடியப்போவதில்லை. மறுமையில் நாம் நீடூழி வாழ்வோம். அப்போது பூமியில் பாவத்தோடு வாழ்ந்த நம்மை, கிறிஸ்துவின் மீது நாம் கொண்ட நம்பிக்கை, ஆவிக்குள்ளான மரணத்தை அடைய விடுவதில்லை என்பதே இப்பகுதியில் இயேசு கிறிஸ்து கூறுகின்ற செய்தியாகும். "இறந்தாலும் பிழைப்பான்" (11:25) உடலளவில் ஏற்படும் இவ்வுலக மரணம் ஒரு முடிவு அன்று. விசுவாசிப்பவனின் வாழ்வு அதன் பின்னரும் தொடர்கிறது என்ற நம்பிக்கையை ஆண்டவர் தருகிறார்.

இவ்வுலகத்தில் வாழ்கின்ற நாம் எல்லா நிலையிலும் கிறிஸ்து மீது கொண்டுள்ள விசுவாசத்தில் வழி விலகாமல் நடப்போம். ஆண்டவர் நம்மை எல்லா நிலைகளிலும் சிறப்பாக ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. ஆமென்.

இறைப்பணியில்
உங்கள் ஆயர்.



# தொற்காள்

தொற்காள் மத்திய தரைக் கடல் பகுதியிலுள்ள யோப்பா என்ற துறைமுகப் பட்டணத்தில் வாழ்ந்து வந்தாள். இவள் தபீத்தாள் எனவும் அழைக்கப்பட்டாள். தபீத்தாள் என்பது எபிரெயப் பெயர், கிரேக்க மொழியில் தெற்காள் ஆகும்.

அப்போஸ்தலர் நடபடிகளின் ஆசிரியர் லூக்கா, அப் 9:36-ல் தொற்காளை "சீஷி" என்று குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். புதிய ஏற்பாட்டில் இவள் மட்டுமே

"சீஷி" என்று அழைக்கப்படத் தகுதி பெற்றவள் என்பது பெருமைக் குரியது. லூக்கா 14:26,27-ல் இயேசு தனக்கு சீஷனாய் இருக்க விரும்புகிறவன் எப்படிப்பட்டவனாய் இருக்க வேண்டும் என்று கூறுவதிலிருந்து இவள் சீஷி என்று அழைக்கப்பட்டதால் இவள் ஆண்டவரோடு நெருங்கிய உறவு கொண்டிருந்தாள் என்றும் இயேசுவுக்காகப் பாடுபடுவதற்கும், மரிப்பதற்கும் ஆயத்தமாயிருந்தாள் என்றும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

தொற்காள் தன் வாழ்நாள் முழுவதும் தன்னால் இயன்ற அநேக நற்கிரியைகளை செய்து வந்தாள். கர்த்தர் தனக்கு கொடுத்த தாலந்தாகிய தையல் தைக்கும் திறமையைப் பயன்படுத்தி யோப்பா பட்டணத்தில் வாழும் ஏழைகளுக்கும், விதவைகளுக்கும் வஸ்திரங்களையும், அங்கிகளையும் தைத்துக் கொடுத்து உதவினாள். தன்னுடைய கைத்திறமையை ஆண்டவருடைய நாம மகிமைக்குப் பயன்படுத்தினாள்.

இயேசு கிறிஸ்துவில் வைத்த விசுவாசத்தைத் தன் கிரியையில் காண்பித்தாள். அவளது விசுவாசம் கிரியைகளினால் நிறைந்திருந்தது. “நன்மை செய்யும்படி உனக்குத் திராணி இருக்கும்போது அதைச் செய்யத்தக்கவர்களுக்கு செய்யாமல் இராதே” என்று சொல்லுகிறபடி நன்மை செய்யும் வாய்ப்பை நழுவ விடாது செய்தாள். இப்படி நற்கிரியைகளைச் செய்து வந்த தொற்காள் திடீரென வியாதிப்பட்டு மரணமடைந்தாள். இவளது மரண செய்தி லித்தா ஊரில் இருந்த பேதுருவுக்குச் சொல்லி அனுப்பப்பட்டது. உடனே பேதுருவும் வந்தார்.

அவளது அன்பினால், அரவணைக்கப்பட்ட விதவைகளால் தொற்காள் தங்களுக்கு தைத்துக் கொடுத்த அங்கிகளையும், வஸ்திரங்களையும் பேதுருவிடம் காட்டினார்கள். மரணவீட்டில் தொற்காள் தான தர்மங்களைப் பெற்ற விதவைகளுக்கு அவளது பிரிவு தாங்கக் கூடாத துயரத்தைத் கொடுத்தது. தங்களுக்கு வஸ்திரங்கள் தைத்து உதவி செய்த அன்புத் தாயாரை இழந்ததால் தாங்கள் யாவரும் கைவிடப்பட்டதை உணர்ந்து கலக்கமடைந்தனர்.


பேதுரு அங்கே கூடியிருந்த எல்லோரையும் வெளியே அனுப்பி ஆண்டவரை நோக்கி “தபித்தாளே எழுந்திரு” என்று ஜெபித்தார். தேவனால் அற்புதம் நடந்தது.தொற்காள் உயிர் பெற்றாள்.இந்த செய்தி யோப்பா பட்டணமெங்கும் தெரிய வந்தது.தபீத்தாளின் நற்கிரியை இன்னும் சிறிது காலம் வெளிப்பட தேவன் சித்தம் கொண்டபடியால் அவள் உயிரோடு எழுப்பப்பட்டாள்.

தொற்காளின் உயிர்த்தெழுதல் மூலம் யோப்பா பட்டண மக்கள் அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

பெண்கள் ஊழியத்திற்குரிய ஒரு சிறந்த கனத்தைத் தொற்காள் சரியாகப் பயன்படுத்தினாள்.

தொற்காளைப் போல ஆண்டவருக்கு சிஷியாய், நற்கிரியை செய்கிறவர்களாய்,தான தர்மம் பண்ணுகிறவர்களாய் வாழ கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக.

**J.ஜெனு ஜெபலின்**
ஆயர் அம்மா



# மிஷனரி
# DAVID BRAINERD

"டேவிட் பிரேய்னர்டு" அமெரிக்கா நாட்டைச் சேர்ந்தவர். செவ்விந்தியர்கள் மத்தியில் ஊழியம் செய்தார். ஒருமுறை செவ்விந்தியர் கூட்டம் டேவிட்டுக்கு விரோதமாக கத்தியோடு ஓடினார்கள். ஆனால் டேவிட் முழங்காலில் நின்று ஜெபித்துக் கொண்டிருந்தார். அவருக்கருகில் ஒரு பெரிய விஷப்பாம்பு டேவிட்டின் முகத்தருகே நின்று கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் அது சுருண்டு திரும்பிப்போய்விட்டது. இது அந்த செவ்விந்தியர் கூட்டத்திற்கு மிகுந்த ஆச்சரியம். இவன் தேவ மனிதன் என்று கொண்டாடினார்கள்; அவரது நண்பர்களாக மாறிவிட்டனர். பசி, பட்டினி, வியாதி போன்றவைகளைக்கண்டு அஞ்சாமல் ஆண்டவருடைய ஊழியத்தை செவ்விந்தியர் மத்தியிலேயே செய்து முடித்தார். உபவாசமும், ஜெபமும் இவரது ஊழியத்தை ஊக்கப்படுத்தின. தேவ ஆவியானவர் அபிஷேகமும் இவருக்கு பெரும் உதவியாக இருந்தது. செவ்விந்தியர்களுக்காகவே கடவுளின் இரட்சிப்பை அறிவித்த David Brainerd(1718-1747) தனது 29-ஆம் வயதில் கொடிய வியாதியினால் மரித்தார்.



# குழந்தை வளர்ப்பு - 3

**"பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகதபடி அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்."** (கொலோசெயர் 3:21).

## குழந்தைகளும் மனித ஜீவன்கள்தான்

உங்கள் பிள்ளகள் எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்று எதிர்காலத் திட்டங்களும் மனக் கோட்டைகளும் உங்கள் உள்ளத்தில் இருக்கலாம். ஆனால் பெரும்பாலும், பிள்ளைகள் கல்லூரியில் காலடி வைத்த பின்புதான், பெற்றோர்கள் அவர்களை ஒரு பொருட்டாகவே மதிக்கத் துவங்குகிறார்கள்.

இன்று அவர்கள் குழந்தைகளாக இருந்தாலும், அவர்களும் உயிருள்ள உணர்ச்சியுள்ள ஜீவன் என்று புரிந்து நடக்காவிட்டால் உங்களுக்கு எந்தத் திட்டமிருந்து என்ன பயன்? (We worry about what a child will become tomorrow, yet we forget that he/she is someone today.)

என்றோ, பின்னோரு நாளில் காட்டவிருக்கும் பாசத்தையும் இன்றே ஏன் காட்டக் கூடாது?

பிள்ளைகளை உபசரியுங்கள். அவர்கள் முன்னேற்றத்தில் ஆரம்பமுதலே அக்கறை காட்டுங்கள். அவர்களுக்காக உங்கள் பணத்தை மட்டுமல்ல, உங்கள் நேரத்தையும் செலவிடுங்கள். அவர்களிடம் அக்கறையுடன் பேசுங்கள். அவர்களின் கருத்துக்களுக்கும் செவிமடுங்கள்; அவர்களின் ஆலோசனகளுக்கும் மதிப்பளியுங்கள். இவ்வாறுள்ள பெற்றோர்களின் ஆலோசனைக்கும், அறிவுரைக்கும் பிள்ளைகளும் பதிலுக்கு மதிப்பளிப்பார்கள். பெற்றோர்கள்பிள்ளைகள் உறவு அன்பெனும் பாசக் கயிற்றினால் பிணைக்கப்பட்டிருக்கும்.

எல்லா மனிதர்களும், (குழந்தைகள் உட்பட), சுய மரியாதையை விரும்புகிறார்கள். எந்த மனிதனும், (குழந்தைகள் உட்பட), அவமதிக்கப் படுவதை விரும்புவதில்லை. எனவே, குழந்தைகளின் சுய மரியாதை காயமடையும்படி, குறைவாகவோ அல்லது அற்பமாகவோ எதையும் பேசுவதையும், செய்வதையும் தவிருங்கள்.

குறை கூறியே (Criticism) வளர்க்கப்படும் பிள்ளைகள், எதிலும் குற்றம் (Condemn) காண்பவர்களாக இருப்பார்கள்

பகைமையுணர்வில் (Hostility) வளர்க்கப்படும் பிள்ளைகள், எப்போதும், எதற்கும் சண்டையிடும் (Fighting Nature) குணத்துடன் இருப்பார்கள்.

அச்சமூட்டி (Fear) வளர்க்கப்படும் பிள்ளைகள், எந்நேரமும் பய உணர்வுடன் (Apprehension) வாழ்வார்கள்.

பரிவிரக்கத்தில் (Pity) வளர்க்கப்படும் பிள்ளைகள், தன்னையே அவலமாகக் (Self-regret) கருதுவார்கள்.

ஏளனப் பேச்சால் (Ridicule) வளர்க்கப்படும் பிள்ளைகள், எவ்விடத்திலும் வெட்கப்பட்டுக் (Shy) கொண்டிருப்பார்கள்.

பொறாமையுடன் (Jealousy) வளர்க்கப்படும் பிள்ளைகள், குற்ற உணர்வோடு (Guilty) வாழ்வார்கள்.

சகிப்புடன் (Tolerance) வளர்க்கப்படும் பிள்ளைகள், பொறுமையைக் (Patience) கற்றுக் கொள்வார்கள்.

ஊக்குவிப்புடன் (Encouragement) வளர்க்கப்படும் பிள்ளைகள், நம்பிக்கையைக் (Confidence) கற்றுக்கொள்வார்கள்.

மெச்சி (Praise) வளர்க்கப்படும் குழந்தைகள், பாராட்டக் (Appriciate) கற்றுக்கொள்வார்கள்.

மதிப்புடன் (Respect) நடத்தப்படும் குழந்தைகள், அன்பு (Love) செலுத்தக் கற்றுக்கொள்வார்கள்.

உரிமை (Approval) கொடுக்கப்பட்டு வளர்க்கப்படும் பிள்ளைகள். தன்னை விரும்பக் (Like himself) கற்றுக்கொள்வார்கள்.

அங்கீகாரத்துடன் (Recognition) வளர்க்கப்படும் பிள்ளைகள். உண்மையைக் (Truth) கற்றுக்கொள்வார்கள்.

நியாயத்துடன் (Fairness) வளர்க்கப்படும் குழந்தைகள், எது நீதி (Justice) என்பதைக் கற்றுக்கொள்வார்கள்.

நேர்மையுடன் (Honesty) வளர்க்கப்படும் குழந்தைகள் எது உண்மை (Truth) என்பதைக் கற்றுக்கொள்வார்கள்.

பாதுகாப்புடன் (Security) வளர்க்கப்படும் பிள்ளைகள், தங்களில் நம்பிக்கையுடன் (Faith) வாழ்வார்கள்.

நட்புடன் (Friendliness) வளர்க்கப்படும் பிள்ளைகள், தாங்கள் வாழும் இந்த உலகம் வாழ்வதற்கு இனிமையான இடம் (world is) nice place) என்பதைக் கற்றுக்கொள்வார்கள்.

குழந்தைப் பருவத்தில், தங்கள் முந்திய வாழ்கை அனுபவத்தில் கற்றுக் கொண்டவைகளையே, பின்னைய நாட்களில் செயல்களாக வெளிப்படுத் துகின்றனர். ஆரம்ப கால வாழ்க்கையே, பிற்கால வாழ்க்கைக்கு அடித்தளம். அடித்தளத்தைச் சீராக அமைப்பது பெற்றோர்களின் கடமை.




# தரங்கம்பாடிக்கு லூத்தரன் மிஷனெரிமாரின் வருகை

### டென்மார்க் அரசர் அனுப்பிய மிஷனெரிமார்

நோய்வாய்ப்பட்ட இளைஞன் ஒருவன் சிகிச்சை பெற மருத்துவர் ஒருவரை நாடி வந்தான். “உன் ஆரோக்கியத்திற்காக நீ வேற்றிடங்களுக்குப் பயணம் செய்ய வேண்டும்” என்று ஆலோசனை கூறப்பட்டது. அவ்விளைஞன் ஏழு மாதக் காலமாகக் கப்பலில் பயணம் செய்து இந்தியாவுக்குச் செல்லப்போகிறான் என்று அந்த மருத்துவர் எதிர்பார்க்கவில்லை! இவ்வாறு இந்திய நாட்டிற்குப் பயணத்தை மேற்கொண்டவர், பர்த்தலோமியோ சீகன்பால்க் (Ziegenbalg) என்பவரே. இவர் இந்தியாவுக்கு வந்த நிகழ்ச்சி மிகவும் முக்கியமானது. ஏனெனில் புராட்டஸ்டண்ட் திருச்சபையின் மிஷனெரிமாராக இந்தியாவுக்கு முதன் முதலாக வந்தவர்கள் என்ற பெருமைக்குரியவர்கள்

சீகன்பால்க், ஹென்றி புளூட்சோவ் (Pluetschau) என்ற இருவர்தாம். இவர்கள் ஜெர்மனி நாட்டிலுள்ள லூத்தரன் திருச்சபையைச் சேர்ந்தவர்கள்.

இளவரசரான பிரெடெரிக், டென்மார்க் நாட்டின் அரசரான போது, தாங்கம்பாடி டேனிஷ் வாணிய மையத்தில் வாழ்ந்துகொண்டிருந்த இந்துக்களைக் குறித்துக் கரிசனை கொண்டார். 1700-ல் தரங்கம் பாடியில் ஏறத்தாழ 15,000 பேர் வாழ்ந்து வந்தனர். இந்நகரத்தைச் சூழ, 15 கிராமங்கள் இருந்தன. அவைகளும் டேனிஷ் குடியேற்றத்தின் ஒரு பகுதிகள், அங்கிருந்த மக்களின் தொகையும் ஏறத்தாழ தரங்கம் பாடி மக்கள் தொகைக்குச் சமமாக இருந்தது.

பெரும்பாலான டென்மார்க் நாட்டவர், தம் நாட்டு மக்களின் நல்வாழ்வில் மாத்திரமே ஆர்வம் காட்டினர். ஆனால் பிரெடெரிக் அரசரோ பரந்த மனமும் விசாலமான நோக்கும் கொண்டவர். இயேசுவின் அன்பைக் குறித்து இந்தியர்களுக்குச் சொல்ல இங்கு மிஷனெரிமாரை அனுப்பிவைக்க விரும்பினார். ஆனால் ஏற்ற ஊழியர்கள் டென்மார்க்கில் இல்லை. அரசவை ஆயராகப் பணியாற்றியவர் ஒரு ஜெர்மானியர். அவருடைய நண்பர்கள் தங்களுக்குத் தெரிந்த பர்த்தலோமியோ சீகன்பால்க், ஹென்றி புளூட்சோவ் என்ற இரண்டு ஜெர்மானிய மாணவர்களைப் பரிந்துரை செய்தனர். இவர்கள் பெர்லின் நகரிலிருந்து கோபன்ஹேகன் பட்டிணம் வருவதற்கு உரிய ரயில் கட்டணத்தை அரசர் அனுப்பிவைத்தார். இவர்கள் தகுதியானவர்களாகக் காணப்பட்டபடியால் டேனிஷ் லூத்தான் திருச்சபையின் பேராயர் ஒருவரால் இவர்களுக்கு அருட்பொழிவு செய்யப்பட்டது. தமது சொந்தப் பணத்திலிருந்து அரசர் இவர்களுக்குச் சம்பளம் கொடுத்த காரணத்தால், இவர்கள் ஜெர்மானியராக இருந்தபோதிலும் “டேனிஷ் அரசர் அனுப்பிய மிஷனெரிமார்” என அழைக்கப்பட்டனர்.

### நேசமில்லா வரவேற்பு

ஏழு மாத காலக் கடினப் பயணத்திற்குப் பின் சீகன்பால்க், புளூட்சோவ் பயணம் செய்த கப்பல் 1706-ல் ஜூலை மாதம் 9ஆம் நாள் தரங்கம்பாடியை வந்து அடைந்தது. அங்குத் துறைமுகம் இல்லாத காரணத்தால் கரைக்குச் சற்றுத் தொலைவிலேயே கப்பல் நின்றது.

சிறிய படகுகளின் மூலம் பயணிகளும், சரக்குகளும் கரைக்குக் கொண்டுவரப்பட வேண்டிய நிலை. சீகன்பால்கும், புளுட்சோவும் மூன்று நாள் வரை படகு கிடைக்காதபடியால் கப்பலிலேயே காத்துக் கிடந்தனர். இவர்கள் வருகை குறித்து யாருக்கும் தெரியாது. தாம் அழைப்புப் பெறாத விருந்தினர் என்பது அவர்களுக்கு இப்போது தெளிவாயிற்று. தங்களுடைய ஆவணங்களுடன் டென்மார்க் அரசு அதிகாரியைச் சந்திக்கக் கோட்டைக்குச் சென்றனர். காலை பத்து மணி முதல் மாலை நான்கு மணி வரை அதிகாரியைச் சந்திக்க இயலவில்லை. கடுமையான வெயிலில் கோட்டைக்கு வெளியே காலை முதல் மாலை வரை காத்திருந்தனர்.

அதன் பிறகு அதிகாரியும், வேறு சில அலுவலர்களும் இவர்களைச் சந்தித்து இந்தியாவுக்கு ஏன் வந்தார்கள் என்று கேட்டனர். இறுதியாக அவர்கள் தரங்கம்பாடிக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். சந்தை வெளிவரை அழைத்துச் செல்லப்பட்டு, அங்கே விடப்பட்டனர். எங்குச் செல்வதென்று அறியாமல் நெடுநேரம் திகைத்து நின்ற இவர்களை இளநிலை அலுவலர் ஒருவர் தனது மாமனார் வீட்டிற்கு அழைத்துப் போனார். அங்குச் சில நாட்கள் தங்கினார்கள். நகரத்தில் போர்ச்சுக்கீசியர் வாழும் பகுதியில் வீடு ஒன்று இவர்களுக்கு அமர்த்தப்பட்டது. துயரமும் ஒருவாறு தணிந்தது.

# GOOD FRIDAY SERVICE - 2024



# திருமறையை தெரிந்துகொள்வோம்

யோபு 16-30

1. யோபு பூமியிடம் கேட்டுக் கொள்வது எது?
2. யோபு யாரைப் பார்த்து தனக்கு தகப்பனும், தாயும், சகோதரியும் என்கிறார்?
3. யோபுவின் வாசஸ்தலத்தின்மேல் என்ன தெளிக்கப்படும்?
4. மூர்க்கமானது எதை வரப்பண்ணும்?
5. யார் கெம்பீரம் குறுகினது?
6. நடுக்கம் எதைப் பிடிக்கும்?
7. யாருடைய ஆலோசனை தூரமாயிருப்பதாக?
8. தவிப்பைப்பார்க்கிலும் எது கடினமானது?
9. வறட்சியும் உஷ்ணமும் எதைப்பட்சிக்கும்?
10. அவன் விழுங்கின ஆஸ்தியைக் கக்குவான் யார் சொன்னது?
11. யாருக்கு தத்தளிப்பு உண்டு?
12. என் உதடுகள் சொல்வதுமில்லை,என் நாக்கு பேசுவதுமில்லை?
13. யாருக்கு பயப்படுவதை ஞானம?எதை விட்டு விலகுவதே புத்தி?
14. யோபு எதை தரித்துக் கொண்டேன் என்று கூறுகிறார்?
15. எலும்புகள் எதினால் காய்ந்து போயிற்று?

கடந்த மார்ச் மாதம் கேள்விகளுக்கு பதிலளித்த அனைவருக்கும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துகொள்கிறோம்.

1. Mrs.Stella Jeshwanth
2. Mrs.Esther Kala Ashok
3. Mrs.Rubavathi
4. Mrs.Rajini Julius
5. Mrs.Selina Stephen
6. Mrs.Baby Jesudass
7. Mrs.Kavitha Johnson
8. Mrs.Merlin Jebahar
9. Mrs.Benisha
10. Mrs.Ruby Jeyaseelan
11. Mrs.Sheela Hendry

**Children's Corner Colouring**


1. San Hedrin
2. Andrea Elizabet

# KIDS CORNER



## Let the Children Come

He said to them, "Let the little children come to me, and do not hinder them, for the kingdom of God belongs to such as these. Mark 10:14b (NIV)




### ACROSS

3. Bringing happiness, pleasure, or contentment to someone
4. Small in size
6. Sons and daughters, young people
7. The parts of the body which connect the hands to the shoulders

### DOWN

1. A Statement accepted as fact
2. A country or territory ruled by a a king or queen
3. To be a member of a group, Such as a club or organization
5. To come in contact with or to feel with your fingers

| | | | |
|---|---|---|---|
| LITTLE | TOUCH | KINGDOM | BLESSED |
| CHILDREN | TRUTH | BELONGS | ARMS |



Jesus loved little children. When parents brought their children to Him, He took them in His arms and blessed them.

# Birthday & Wedding day Celebrants

1st April
MISS EVANGELIA SHARON
2nd April
MASTER JOHN ISAAC
MASTER GILBERTJOHN RAJ
3rd April
MISS NIFFANA JOE.N
MRS JENIKA
4th April
MISS MAGDALENE
MRS JANETTE GLORY DOSS
MISS JOSHNA JOSEPH J.
MR JEFFERY
5th April
MISS ANNIS JASLIN J.
MR LAVIN RAJ
6th April
MR DARMARAJ.P
MISS Y EVANGELIN BLESSY
MISS Y EVANGELIN JENCY
7th April
MASTER ACHILLES JEREMIAH
MASTER NICK PETERSON.V
MR ABRAHAM.T
8th April
MASTER JASIEL
9th April
MRS MARY DINAKARARAJ
10th April
MISS MAGINA
11th April
MR MANGALRAJ
12th April
MR PHILIP MOSES
MRS A.MONIC SHEELA
MRS VIJAYANTHA
14th April
VETHANAYAGAM
MRS VIJILA S.
MRS C SUBHA
15th April
MISS STEFFIENA
MR DANIEL NARGUNAM
MR JACOB MANI DURAI
16th April
MR JOHNSON GNANARAJ S.
17th April
MRS A.EDITH MIRIAM
18th April
MISS PATRICIA ESTHER
20th April
MASTER DARREN JOSHUA C.
MRS JEBA SABTHIKA
22th April
MISS SHITHRAH ABISHAG
MRS SHAKILA SURESH
24th April
MISS SHARON JABA
MASTER KEVIN JOSHUA
25th April
MISS AMITA NESAMALAR
26th April
MR SURESH GANESAN

27th April
MISS CATHIRINE CHRISTINA J.
28th April
MR NELSON RAO J.
MR SUNILKUMAR K. (Sonapoor)
MR M.BASKARAN
29th April
MR GIFTSON ARUL RAJ
MR SIMJU GEORGE JOSEPH
MRS SALINI D'SILVA
30th April
MRS ANU BEULAH BERNICE.D

## Wedding Anniversary

5th April
MR & MRS SELVARAJ MURRAY
9th April
MR & MRS SOLOMON RAJKUMAR R.
22th April
MR & MRS R.JEGAN
23th April
MR & MRS JOHN JOSEPH J.
24th April
MR & MRS ANTONY LAMBERT DINAKARAN
27th April
MR & MRS CHRISTOPHER BENJAMIN BOSWELL E.
29th April
MR & MRS LAWRANCE N.

## DAILY BIBLE READING APRIL 2024

| Day | Morning | Evening |
|---|---|---|
| 01 MON | மத்தேயு /MATTHEW 17 :1-27 | மத்தேயு /MATTHEW 18:1-35 |
| 02 TUE | மத்தேயு /MATTHEW 19:1-30 | மத்தேயு /MATTHEW 20:1-34 |
| 03 WED | மத்தேயு /MATTHEW 21:1-27 | மத்தேயு /MATTHEW 21:28-46 |
| 04 THUR | மத்தேயு /MATTHEW 22;1-32 | மத்தேயு /MATTHEW 22;33-46 |
| 05 FRI | மத்தேயு /MATTHEW 23;1-39 | மத்தேயு /MATTHEW 24:1-51 |
| 06 SAT | மத்தேயு /MATTHEW 25:1-46 | மத்தேயு /MATTHEW 26:1-46 |
| 07 SUN | சங்கீதம் /PSALMS 77 | சங்கீதம் /PSALMS 78 |
| 08 MON | மத்தேயு /MATTHEW 26:47-75 | மத்தேயு /MATTHEW 27:1-44 |
| 09 TUE | மத்தேயு /MATTHEW 27:45-66 | மத்தேயு /MATTHEW 28:1-20 |
| 10 WED | மாற்கு /MARK 1:1-45 | மாற்கு /MARK 2:1-28 |
| 11 THUR | மாற்கு /MARK 3;1-35 | மாற்கு /MARK 4;1-39 |
| 12 FRI | மாற்கு /MARK 5:1-43 | மாற்கு /MARK 6:1-55 |
| 13 SAT | மாற்கு /MARK 7;1-37 | மாற்கு /MARK 8:1-38 |
| 14 SUN | சங்கீதம் /PSALMS 79 | சங்கீதம் /PSALMS 80 |
| 15 MON | மாற்கு /MARK 9;1-50 | மாற்கு /MARK 10:1-52 |
| 16 TUE | மாற்கு /MARK 11:1-33 | மாற்கு /MARK 12;1-44 |
| 17 WED | மாற்கு /MARK 13:1-37 | மாற்கு /MARK 14:1-42 |
| 18 THUR | மாற்கு /MARK 14:43-72 | மாற்கு /MARK 15:1-47 |
| 19 FRI | மாற்கு /MARK 16:1-20 | லூக்கா /LUKE 1:1-38 |
| 20 SAT | லூக்கா /LUKE 1:39-80 | லூக்கா /LUKE 2:1-52 |
| 21 SUN | சங்கீதம் /PSALMS 81 | சங்கீதம் /PSALMS 82 |
| 22 MON | லூக்கா /LUKE 3:1-38 | லூக்கா /LUKE 4;1-44 |
| 23 TUE | லூக்கா /LUKE 5;1-39 | லூக்கா /LUKE 6;1-26 |
| 24 WED | லூக்கா /LUKE 6:27-49 | லூக்கா /LUKE 7:1-17 |
| 25 THUR | லூக்கா /LUKE 7;18-50 | லூக்கா /LUKE 8;1-25 |
| 26 FRI | லூக்கா /LUKE 8;26-56 | லூக்கா /LUKE 9:1-36 |
| 27 SAT | லூக்கா /LUKE 9;37-62 | லூக்கா /LUKE 10:1-42 |
| 28 SUN | சங்கீதம் /PSALMS 83 | சங்கீதம் /PSALMS 84 |
| 29 MON | லூக்கா /LUKE 11;1-32 | லூக்கா /LUKE 11;33-54 |
| 30 TUE | லூக்கா /LUKE 12;1-34 | லூக்கா /LUKE 12:35-59 |

# ஆராதனை தியானப் பொருள்

## ஏப்ரல் - 2024

| நாள் | திருமறைபாடம் | | தியானப்பொருள் |
|---|---|---|---|
| ஞாயிறு<br>April-7<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | ஆதியாகமம் 32:22-32<br>அப்போஸ்தலர் 9:1-18<br>யோவான் 20:24-29<br>சங்கீதம் 40 | உயிர்த்த ஆண்டவருடன் சந்திப்பு<br>ENCOUNTER WITH THE RISEN LORD |
| ஞாயிறு<br>April-14<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | ரூத் 2:1-18<br>அப்போஸ்தலர் 9:36-43<br>யோவான் 21:1-14<br>சங்கீதம் 15 | உயிர்த்த ஆண்டவரைப் பணியிடத்தில் அடையாளம் காணுதல்<br>IDENTIFYING THE RISEN LORD IN THE WORK PLACE |
| ஞாயிறு<br>April-21<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | ஏசாயா 25:1-9<br>அப்போஸ்தலர் 4:32-37<br>லூக்கா 24:13-35<br>சங்கீதம் 126 | உயிர்ப்பின் அனுபவப் பின்னணியத்தில் சமூக உருவாக்கம்<br>COMMUNITY FORMATION AROUND RESURRECTION EXPERIENCE |
| ஞாயிறு<br>April-28<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | 2 இராஜாக்கள் 4:27-37<br>அப்போஸ்தலர் 26:12-23<br>யோவான் 11:17-28<br>சங்கீதம் 90 | கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல் : உயிர்ப்பு<br>BELIEVING IN CHRIST : RESURRECTION |